**இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பணியகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பணியகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பணியகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பணியகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பணியகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியம இலக்கம் 01 இன் பிரகாரம் சொத்துக்கள் | இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகத்தின் | நியம இலக்கம் 01 இற்கு இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும், காசு மீதியில் ரூபா 1,339,466 தொகையான வங்கி மேலதிக பற்று ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. | மூலம் வங்கி மேலதிகப் பற்று பெறப்படாதிருந்ததுடன், அது பிரதான கணக்குகள் தொடர்பான விபரங்கள் மற்றும் நிதிய முகாமைத்துவ கணக்கிற்கிடையே (Fund Management) ஏற்பட்டுள்ள தொடர்புகள் கணக்குகள் அட்டவணை 02.11 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பணியகத்தில் காசோலை விநியோகிக்கும் போது வங்கி அதற்குரிய தொகையை நிதிய முகாமைத்துவ (Fund Management) கணக்கிலிருந்து பிரதான கணக்கிற்கு மாற்றியிருந்ததுடன், ஆகக்குறைந்த தொகையான ரூபா 5 மில்லியன் தொகையும் பேணப்பட்டு செல்லப்பட்டிருந்தது. இதன் பிரதான நோக்கமாக வங்கியில் உள்ள Idle பணம் நாள்தோறும் முதலீடு செய்யப்பட்டு வட்டி வருமானம் உழைக்கும் நோக்கமாக இருந்தது. அதனால் பணியகத்தின் வங்கி மேலதிக பற்று பெறப்படாதிருந்தமையும் அந்த கணக்குகள் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பாக இருந்தமையையும் அறியத்தருகின்றோம். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக் கொன்று ஈடுசெய்ய முடியாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 02 இற்கு இணங்காத வகையில் தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு இலாபம் ரூபா 13,917,455 தொகை மற்றும் முதலீட்டு செயற்பாடுகளில் | குறிப்பிட்டுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியம இலக்கம் 02 இன் பிரகாரத் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 2,190,078 தொகை அதிகரித்து காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | நியம இலக்கம் 05 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாரான விகிதத்தில் நடைமுறையில் உள்ள பணத்திற்கு மாற்றி சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பணியகத்தினால் வெளிநாடுகளில் மேம்பாட்டு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 95,118,163 தொகையான முற்பண கணக்கின் மீதி முற்பணம் விநியோகிக்கப்பட்ட திகதியில் காணப்பட்ட நாணய மாற்று விகிதாசாரத்தில் மாற்றி காண்பிக்கப்பட்டது. | வெளிநாட்டு மேம்படுத்தல் செயற்பாடுகளுக்ககாக அனுப்பப்பட்ட பணம் வெளிநாட்டு தூதரகங்களில் பணம் பல்வேறு முறைகளில் கணக்கு வைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்குகளை இணக்கஞ்செய்யும் போது காணக்கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் சில தூரகங்களில் வெளிநாட்டு பணம் பயன்படுத்தப்படுவதுடன், சில தூதரகங்கள் ரூபாய் மூலம் கணக்குகளை வைக்கின்றது. அதன் பிராகாரம் வெளிநாட்டு பணங்களில் மாத்திரம் மீதி குறிப்பிடப்படும் நாடுகளில் கணக்குகள் மாத்திரம் ஆண்டின் இறுதியில் உள்ள நாணயமாற்று விகிதாசாரத்தின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படுவதுடன், கணக்குகளை ஒப்பீடு செய்யும் வசதிக்காக ரூபாய்களில் கணக்குகள் வைக்கப்படுகின்ற நாடுகளுக்கு இடையே முற்பண மீதிகள் அந்த பணத்தில் கணக்கீடு செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் நாணயமாற்று விகிதம் மாற்றமடைந்ததன் அடிப்படையில் ஏற்படுகின்ற இலபாம் அல்லது நட்ட மீதிகளை உறுதிப்படுத்தும் அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் கணக்குகளில் உள்ளடக்கப்படும். | நியம இலக்கம் 05 இன் பிரகாரம் ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான விகிசாரத்தில் நடைமுறையில் உள்ள பணத்தில் மாற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நியம இலக்கம் 19 இன் பிரகாரம் குறித்துரைத்த இலாப பங்கீடுகள் (சொத்துக்கள்) கடப்பாடுகளின் தேறிய பெறுமதி நிதி நிலைமை கூற்றின் விபரத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 15,492,028 தொகையான பணிக்கொடை முதலீடுகள் மற்றும் ரூபா 18,469,375 தொகையான ஓய்வூதிய பணிக்கொடைகளுக்கான ஒதுக்கீடுகள் நிதி நிலைமை விபரத்தில் தனிப்பட்ட ரீதியில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றின் விபரத்தில் பணிக் கொடை முதலீடுகள் மற்றும் ஓய்வூதிய பணிக் கொடைகளுக்கான ஒதுக்கீடுகள் தனித்தனியாக காண்பிக்க வேண்டியிருந்தமை மற்றும் கணக்குகள் வைக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் ஒன்றிணைத்து குறிப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். | நியம இலக்கம் 19 இன் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் ரூபா 238,476,181 ஆக இருந்த போதிலும், அது ரூபா 306,788,637 ஆக நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்களில் கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 68,312,456 தொகையினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக பெறவேண்டிய வட்டி முறையே ரூபா 34,954,785 தொகை மற்றும் ரூபா 326,027 தொகையினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் ரூபா 35,280,812 இனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | தற்போது இந்த தவறுகள் திருத்தப்பட்டிருந்ததுடன் மீண்டும் தயாரிக்கப்படுகின்ற கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (JV 29, 30, 31) (இணைப்பு 02) | சரியாக வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | வெளிநாடுகளில் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தூதரகங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம் | 21,336,454 | 20,577,400 | 759,054 | தற்போது காணப்படுகின்ற கொவிட் தொற்று நோய் நிலைமையினால் தூரகங்களினால் வழங்கப்பட்ட ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாகவும், ஆவணங்கள் கிடைப்பதில் உள்ள தாமதம் என்பவற்றினாலும் இந்த வேறுபாடுகள் ஏற்பட்டிருந்ததுடன், உரிய ஆவணங்கள் கிடைத்ததன் பின்னர் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். 2019 ஆம் ஆண்டின் இறுதியில் முற்பண கணக்கின் மீதி ரூபா 260 மில்லியன் ஆக இருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் இறுதியில் போது அது 95 மில்லியன் வரை பெறுமதி குறைக்கப்பட்டிருந்தது | கால தாமதம் இன்றி முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு | 39,274,283 | 108,336,570 | 69,062,287 | தற்போதும் இந்த வேறுபாடு இனங்காணப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் | நிறுவனங்களுக்கு இடையே பெறவேண்டிய / செலுத்த வேண்டிய |

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய பணம். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | கணக்குகள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாது காணப்படுகின்ற 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையிலான கால வீச்சில் நிலுவையாக இருந்த கூட்டுமொத்தமாக ரூபா 4,135,110 பெறுமதியான அட்டுறு செலவினம் காணப்பட்டது. | தற்போது இந்த தொகை ரூபா 3,665,909.33 வரை குறைவடைந்திருந்ததுடன் , எஞ்சியுள்ள மீதியையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். (இணைப்பு 04) | அட்டுறு செலவினங்களை தமாதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 1.6.2 முற்பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக அனுப்பப்பட்டு வெளிநாட்டு நடைமுறையியிலுள்ள முற்பணம் ரூபா 36,495,001 இற்காக உரிய மீதி உறுதிப்படுத்தல் காணப்படாதிருந்ததுடன் தூதரகங்களின் மூலம் சிட்டைகள் சமர்ப்பிக்காமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாத முற்பணங்களின் பெறுமதி ரூபா 11,369,702 ஆகும். மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அவற்றின் தமாதமான காலவீச்சு 17 மாதங்கள் முதல் 37 மாதங்கள் வரையாக இருந்தது. | தற்போது காணப்படுகின்ற கொவிட் தொற்றுநோய் நிலைமையினால் இந்த தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் தற்போது மேலும் சில நாடுகளில் இருந்து மீதி உறுதிப்படுத்தல் கிடைத்துள்ளதுடன் மேலும் மீதி உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இந்த வேறுபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காலதமதம் இன்றி முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2010 யூன் 03 ஆம் திகதி வழங்கப்பட்ட ரூபா 1,575,000 முற்பணத் தொகைக்காக உரிய வெளிநிறுவனத்தில் இருந்து வரிப் பட்டியல் கிடைத்திருக்கும்போது மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் தீர்க்கப்படாத முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த வேறுபாட்டிற்கான காரணம் வரிப் பட்டியல் கிடைக்கப்பெற்ற போதிலும் உரிய பணியகத்திற்கு சரியாக அறிக்கை கிடைக்கப்பெறாமையினால் உரிய பணி முடிவடைந்திருந்த போதிலும் தீர்க்கப்படாதுள்ளதா என உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தமையினால் பணியகத்தினால் இந்தப் பணம் முற்பணமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | தேவையான உறுதிப்படுததல்களைப் பெற்று முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவலக சட்டத்தின் கீழ் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பரிவின் 09 ஆம் உப பிரிவு | பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கலண்டர் ஆண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் கழிவதற்கு முன்னர் அந்த ஆண்டின் பணியகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள், கூற்றுக்கள் மற்றும் இணக்க கூற்றுக்கள் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | அறிக்கைகள், கூற்றுக்கள் மற்றும் இணக்க கூற்றுக்கள் அமைச்சருக்கு உரியவாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 102 மற்றும் 104 | ரூபா 308,700 பெறுமதியான மடிகணனி மூன்று மடிகணனிகள் தொலைந்து போனமை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 308,700 பெறுமதியான 03 மடிகணனிகள் தொலைந்து போயிருந்தமை அறிக்கையிடபட்டுள்ளது. | தொலைந்து போனமை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 391,127,400 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 26,641,245 ஆக இருந்தது. அதன் பிரகாரம் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 364,486,161 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மொத்த வருமானம் ரூபா 1,488.601,095 இனால் குறைவடைந்திருந்த போதிலும் வியாபாரம் சார்ந்த செலவினங்கள் ரூபா 1,832,554,498 இனால் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பணியகத்தின் தற்போதைய வியாபார பெயர் "So Sri Lanka" ஆக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட வியாபார பெயர் "Wonder of Asia' ஆகும். ஆதன் பிரகாரம் Wonder of Asia வியாபார பெயருடன் ஒன்று ரூபா 4,300 வீதம் 398 கொடிகள் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் பயன்படுத்த முடியாது காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 1,711,400 ஆகும். | பணியகத்திற்கு சொந்தமாக இதற்கு முன்னர் இவ்வாறான கவர்ச்சிகரமான கொடிகள் எதுவும் காணப்படாதிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட இந்த கொடிகள் நிறுவனத்தனாலும், வரிசை நிறுவனங்களினாலும் சில வருடங்களின் போது அநேக சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பணியகத்தின் " Wonder of Asia" வியாபார பெயர் "So Sri Lanka" ஆக மாற்றப்பட்டதன் அடிப்படையில் Wonder of Asia பெயரில் மேம்படுத்தல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு ஏற்பட்டமையினால் அந்த கொடி இருப்புக்களை பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்தது. எதிர்காலத்தில் உரிய கொடி இருப்புக்களை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தேவையினை கவனத்தில் கொண்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணியகத்தன் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் 2019 சனவரி 07 ஆம் திகதி சம்பளமற்ற விடுமுறையின் அடிப்படையில் வெளிநாடு சென்றிருந்த போதிலும் வெளிநாடு செல்வதற்கு முன் அவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 172,375 இடர் கடன் தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 யூன் 02 ஆம் திகதி வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் ரூபா 180,806 அறவிட வேண்டிய கடன் மீதியாக இருந்தது. | இந்த முகாமைத்துவ உதவியாளர் குறுங்கால வெளிநாடு விடுமுறை முன் அங்கீகாரத்துடன் 07.01.2019 ஆம் திகதி முதல் 29.03.2019 திகதி வரை 03 மாதங்களுக்கு அண்மித்த காலத்திற்கு வெளிநாடு சென்றிருந்தார். இதற்காக 14 நாட்கள் சம்பளத்துடன் 68 நாட்கள் சம்பளமற்ற விடுமுறையும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் வெளிநாடு சென்றிருந்த போது மீண்டும் 30,03.2019 முதல் 29.03.2020 வரை முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கை 04/2018 இன் கீழ் வைத்திய சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இதனால் அவரிடமிருந்து நிறுவனத்திற்கு அறவிடவேண்டியவைகள் இரண்டாவது தடவை அவர் வெளிநாட்டு விடுமுறை அங்கீகரிப்பதற்கு முன் அறவிடுவதற்கான இயலுமை காணப்படவில்லை. எனினும் இரண்டாவது தடவை அவர் வெளிநாடு சென்றிருந்ததுடன் இது தொடர்பாக அவரின் பெற்றோர்கள் ஊடாக அதனை அறிவிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் சகல கடிதங்களுக்கும் அவரரின் வதிவிடம் மாற்றப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டு தபால் நிலையத்தில் இருந்து மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. இதனால் இது தொடர்பாக பஹ்ரைன் தூதுவர் அலுவலகம் ஊடாக அறிவிப்பதற்கும், அதன் மூலம் இந்த பணத்தை தீர்த்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது கடன் பணத்தை தீர்ப்பதற்கு பிணையாளருக்கு | சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கும் போது உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய கடன் பணத்தை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கபட வேண்டி இருந்ததுடன் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அல்லது பிணையாளரிடமிருந்து கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கட்டளை விநியோகிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உதவி பணிபாளருக்கு எதிராக தற்போது முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனை ஒன்று நடாத்தப்படுகின்றது. இந்த ஒழுக்காற்று பரிசோதனையின் இறுதியில் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தின் பிரகாரம் நிறுவனத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.